சார்பு நீதிமன்றம், உத்தமபாளையம்

நாள்: 22.11.2022 SC.94/2017

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | மாரிச்சாமி | தொழில் | : |
| தகப்பனார்/கணவர் பெயர் | : | | வயது | : |
| விலாசம் | : | | | |

அ.சா.1

---

முதல் விசாரணை

நான் சீலையம்பட்டியில் அண்ணாமலை பிள்ளை தெருவில் குடியிருந்து வருகிறேன். கடந்த 10.11.2012ம் தேதி காலை 9.00 மணியிலிருந்து என் மகன் ஆதவனை சீலையம்பட்டியில் தேடிக் கொண்டிருந்தோம். எங்கும் தேடி கிடைக்காததால் இரவு 10.30 மணியளவில் சின்னமனூர் காவல்நிலையத்தில் என்னுடைய மகன் ஆதவனை காணவில்லை என்று புகார் கொடுத்தோம். அன்று இரவு சுமார் 12.30 மணியளவில் நான் சின்னமனூர் காவல்நிலையத்தில் இருக்கும்போது ஒரு நம்பரிலிருந்து என் செல்போனுக்கு அழைப்பு வந்தது. அந்த எண்.9930720751 அதிலிருந்து என் கைப்பேசி எண்.9791542476-க்கு அழைப்பு வந்தது. ரூ.5,00,000 லட்சம் கொடுத்தால் உன் பிள்ளையை ஒப்படைப்பேன். நான் சொல்லும் இடத்திற்கு ரூ.5,00,000-ஐ கொண்டு வரவேண்டும். மறுநாள் காலையில் உனக்கு போன் காலை 10.00 மணிக்கு போன் செய்வேன். சின்னமனூர் காவல்நிலைய அதிகாரி என்னை தேனிக்கு போவோம் என்று கூப்பிட்டுச் சென்றார். அதன்பின் எனக்கு போன் செய்தவர் என்னை உசிலம்பட்டிக்கு வா என்று அழைத்தார். அவர் அழைத்த இடத்தில் நாங்கள் சென்று பார்த்தபோது அவர் அங்கு இல்லை. நேரம் ஆகிவிட்டதால் நான் உசிலம்பட்டியில் போலிஸ் பாட்டியுடன் தங்கிவிட்டோம். உசிலம்பட்டியில் இருக்கும்போது மறுபடியும் என் கைப்பேசி 9791542476-க்கு அழைப்பு வந்தது. அப்போது காவல்துறை அதிகாரிகள் அந்த செல் நம்பரை வைத்து அந்த நம்பர் எங்கு இருந்து வருகிறது. பேசிய நபர் எங்கு இருக்கிறா என்று கண்டு பிடித்தார்கள். அதன்பிறகு மதுரைக்கு காவல்துறை அதிகாரிகளுடன் நானும் சென்றேன். அங்கு மதுரை ராஜாஜி அரசு மருத்துவமனைக்கு சென்றோம். அங்கு என்னை ஒரு இடத்தில் நிறுத்தி விட்டு சிறிது நேரம் கழித்து எனது குழந்தையை காவல்துறை அதிகாரிகள் கொண்டு வந்தார்கள். அப்போது என்னிடம் இது என்

குழந்தையா என்று அடையாளம் கேட்டார்கள். என்னை பார்த்தவுடன் என் மகன் என்னிடம் ஓடி வந்துவிட்டான். போலிசார் என்னிடம் என் மகனை முழுவதுமாக பரிசோதித்துக் கொள்ள வேண்டும் என்றும், வீட்டிற்கு அழைத்துச் செல்ல வேண்டும் என்று சொன்னார்கள். பின்னர் பேசிக்கொள்ளலாம் என்று என்னிடம் குழந்தையை ஒப்படைத்தார்கள். அதற்கு மறுநாள் நானும் எனது மனைவி சூர்யாவும் தேனி மாவட்ட கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு காலை 10.00 மணிக்கு சென்றோம். அப்போது காவல்துறை கண்காணிப்பாளரிடம் பேசியபோது அதற்கு அவர் குழந்தையை உன் கையில் ஒப்படைத்து விட்டோம். குழந்தையை கடத்திக் கொண்டு சென்றவர்களுக்கு தக்க தண்டனை வாங்கிக்கொடுங்கள் என்று நாங்கள் சொன்னோம். போலிசார் என்னை அங்கு வைத்து விசாரணை செய்தார்கள். அதன்பிறகு தேனி அரசு மருத்துவமனையில் என்னுடைய மகனுக்கு மருத்துவ பரிசோதனை செய்ய போலிசார் ஏற்பாடு செய்தார்கள். மீண்டும் அழைக்கும்போது ஆஜராக வேண்டும் என்று சொல்லி என்னை அனுப்பி விட்டார்கள். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். போலிசார் என் குழந்தையை கடத்தியதாக எதிரிகளை என்னிடம் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் அவர்கள் என்னிடம் காண்பித்தார்கள். நான் என் மகன் காணாமல் போனதை பற்றி போலிசாரிடம் கொடுத்த புகார் கொடுக்க சென்றபோது புகார் நான் சொல்லி என் தம்பி பாலசுப்பிரமணியன் எழுதி நான் கையெழுத்து போட்டு கொடுத்தேன். 10.11.2012ம் தேதிய அந்த புகார் என்னிடம் காட்டப்படும் புகார் ஆகும். அதில் உள்ள கையெழுத்து என்னுடைய கையெழுத்து ஆகும். அந்த புகாரில் உள்ள கையெழுத்து **அ.சா.ஆ.1**.

சார்பு நீதிமன்றம், உத்தமபாளையம்

நாள்: 22.11.2022 SC.94/2017

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சூர்யா | தொழில் | : | |
| தகப்பனார்/கணவர் பெயர் | : | | வயது | : | |
| விலாசம் | : | | | | |

அ.சா.2

---

முதல் விசாரணை

நான் சீலையம்பட்டியில் அண்ணாமலை பிள்ளை தெருவில் குடியிருந்து வருகிறேன். 10.11.2012ம் தேதி காலை 9.00 மணிக்கு என் மகன் ஆதவன் காணாமல் போய்விட்டான். அதன்பிறகு எங்கள் ஊர் சீலையம்பட்டி முழுவதும் தேடிப்பார்த்தோம். எனது மகன் கிடைக்கவில்லை. அன்று இரவு 10.30 மணியளவில் சின்னமனூார் காவல்நிலையம் சென்று நானும் எனது கணவர், எனது கணவரின் தம்பி பாலசுப்பிரமணியனும் சின்னமனூார் காவல்நிலயத்திற்கு புகார் அளிப்பதற்காக சென்றோம். அன்று இரவு 12.30 மணியளவில் எனது கணவருக்கு செல்போனில் அழைப்பு வந்தது. குழந்தையை நாங்கள் தான் வைத்திருக்கிறோம். பணம் ரூ.5,00,000-ம் கொடுத்து குழந்தையை கூட்டிச்செல்ல வேண்டும் என்று கேட்டிருந்தார். மறுநாள் காலையில் போலிசார் அழைப்பு வந்த நம்பரை கேட்டு ஊரில் விசாரணை செய்தார்கள். எனது கணவரை அவர்களுடன் வருமாறு போலிசார் அழைத்துச் சென்றார்கள். போலிசார் என் கணவருடன் என் மகனை தேடி தேனி, ஆண்டிபட்டி, உசிலம்பட்டி போன்ற பகுதிகளில் தேடினார்கள். செல்போன் அழைப்பு வந்த டவரை வைத்து போலிசார் என்மகனை கண்டுபிடித்து அழைத்து வந்துவிட்டார்கள். என் மகனை மதுரை அரசு மருத்துவமனையிலிருந்து அழைத்து வந்தார்கள். போலிசார் எங்களிடம் சிவசங்கரி, நடராஜன் ஆகியோர் என் மகனை கடத்தியதாக தெரிவித்தார்கள். அவர்களை எனக்கு அடையாளம் தெரியும். தற்போது நீதிமன்றத்தில் எதிரிகள் ஆஜராகியுள்ளார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

சார்பு நீதிமன்றம், உத்தமபாளையம்

நாள்: 22.11.2022 SC.94/2017

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | பெரியசாமி | தொழில் | : |
| தகப்பனார்/கணவர் பெயர் | : | | வயது | : |
| விலாசம் | : | | | |
| | | அ.சா.3 | | |

---

முதல் விசாரணை

நான் சீலையம்பட்டியில் அண்ணாமலை பிள்ளை தெருவில் குடியிருந்து வருகிறேன். 10.11.2012ம் தேதி காலை 10.00 மணிக்கு மாரிச்சாமியும், சூர்யாவும் அவர்களுடைய மகனான ஆதவனை தேடிக்கொண்டிருந்தார்கள். அப்போது நாங்களும் ஊரில் உள்ள அனைவரும் சேர்ந்து தேடினோம். கிடைக்கவில்லை. அன்று மாலை 6.00 மணியளவில் நான் மாரிச்சாமியிடம் குழந்தையை காணவில்லை நம் அனைவரும் சென்று சின்னமனூார் காவல்நிலையத்தில் புகார் கொடுப்போமத் என்று சொன்னேன். அன்று இரவு 10.30 மணிக்கு மாரிச்சாமி சின்னமனூர் காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தார். காவல்துறையினர் ஊரில் வந்து விசாரணை செய்தார்கள். மறுநாள் காலையில் எங்கள் ஊர் சீலையம்பட்டிக்கு வந்து நாங்கள் குடியிருக்கும் அண்ணாமலை பிள்ளை தெரு மற்றும் ஊர் முழுவதும் விசாரணை செய்தார்கள். மறுநாள் செய்தித்தாள் மூலம் பார்த்து குழந்தையை கடத்தியது சிவசங்கரியும், நடராஜன் என்பவர் தான் என தெரிந்து கொண்டோம். சிவசங்கரி என்பவர் ஏற்கனவே அடிக்கடி எங்கள் ஊரைச்சேர்ந்த மாரிச்சாமி அப்பா நடராஜ்பிள்ளை வீட்டுக்கு வந்து செல்வார். அதனால் ஏற்கனவே எனக்கு அவரை தெரியும். போலிசார் என்னை விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும்.

சார்பு நீதிமன்றம், உத்தமபாளையம்

நாள்: 22.11.2022 SC.94/2017

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | பாலசுப்பிரமணியன் | தொழில் | : |
| தகப்பனார்/கணவர் பெயர் | : | | வயது | : |
| விலாசம் | : | | | |

அ.சா.4

---

முதல் விசாரணை

நான் சீலையம்பட்டியில் ராமசாமி பிள்ளை தெருவில் குடியிருந்து வருகிறேன். 10.11.2012ம் தேதி நான் காலை சுமார் 8.00 மணியளவில் எனது வீட்டிலிருந்து நான் ஆசிரியராக பணிபுரிந்து வந்த சின்னமனூர் அண்ணா நடுநிலைப்பள்ளிக்கு புரப்பட்டுக் கொண்டிருந்தபோது எனது வீடடின் முன்பு எனது அண்ணன் மாரிச்சாமியின் பிள்ளைகள் சௌமியா, பாலபாரதி, ஆதவன் ஆகியோர்கள் விளையாடிக் கொண்டிருந்தார்கள். அப்போது அவர்கள் விளையாடிக் கொண்டிருந்ததைப் பார்த்துவிட்டு நான் பள்ளிக்கு சென்று விட்டேன். அன்று காலை சுமார் 10.30 மணியளவில் எங்கள் ஊரைச்சேர்ந்த பக்கத்து வீட்டுக்காரர் என்னைத்தேடி அங்கு வந்தார். அப்போது அவரிடம் என்ன விசயமாக என்னை பார்க்க வந்தாய் என்று கேட்டபோது உன்னுடன் உனது அண்ணன் மகன் ஆதவனை கூப்பிட்டு வந்தாயா என்று கேட்டார். நான் இல்லை நான் வரும்போது என் வீட்டின்முன்பு தான் விளையாடிக் கொண்டிருந்தான் என்று சொன்னேன். அப்போது அந்த நபரிடம் என்ன விசயம் என்று மீண்டும் நான் கேட்டபோது ஆதவனை காணவில்லை. ஊரில் அனைவரும் தேடிக்கொண்டிருக்கிறார்கள். நீ ஏதும் உடன் கூப்பிட்டு வந்தாயா என்று மீண்டும் ஒருமுறை கேட்டார். இல்லை என்று சொன்னேன். அதன்பிறகு அன்று மாலை 4.05 மணிக்கு நான் வீட்டிற்கு திரும்பி வந்து ஊர் மக்களுடன் சேர்ந்து என் அண்ணன் மகன் ஆதவனை எங்கு தேடியும் கிடைக்கவில்லை. அன்று இரவு 10.30 மணிக்கு நானும் எனது அண்ணன் மாரிச்சாமியும், அண்ணன் மனைவி சூர்யாவும் சின்னமனூர் காவல்நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்தோம். அதன்பிறகு வீட்டிற்கு வந்துவிட்டோம். அதன்பிறகு என் அண்ணன் செல்போனுக்கு சுமார் இரவு 12.30 மணியளவில் ஒரு போன் கால் வந்ததாகவும், உன் குழந்தையை நாங்கள் கடத்திக்கொண்டு வந்திருக்கிறோம். உன் குழந்தை உனக்கு வேண்டுமென்றால்

ரூ.5,00,000-ம் கொண்டு வரவேண்டும் என்று சொன்னார்கள் என்றும் எனது அண்ணன் என்னிடம் சொன்னார். அதன்பிறகு எனது அண்ணை நான் தொடர்பு கொள்ள முடியவில்லை. அதன்பிறகு 12.11.2012 அன்று காலை சுமார் 6.00 மணியளவில் காணாமல் போன ஆதவனை எனது மாமா செந்தில்குமார் கொண்டு வந்து எங்கள் ஊரில் உள்ள பிள்ளைமார் சங்க கட்டிடம் முன்பு காட்டினார். அப்போது ஊர் மக்கள் அனைவரும் காணாமல் போன குழந்தை கிடைத்துவிட்டது என்று ஆனந்தக் கண்ணீர் வடித்தனர். அதன்பிறகு எனது அண்ணனும், எனது அண்ணன் மனைவியும் அவர்களுடைய மகன் ஆதவனை மருத்துவமனைக்கு பரிசோதனைக்காக அழைத்து சென்றார்கள். என்னிடம் காட்டப்படும் 10.11.2012ம் தேதி புகார் நான் கைப்பட எழுதி என் அண்ணன் கையெழுத்துப் போட்ட புகார் ஆகும். போலிசார் என்னை விசாரித்தார்கள். ஆஜர் எதிரிகளைத் தெரியும்.